# செம்மண்

நிலம் 3 துகள் 157 வள்ளுவர் ஆண்டு 2052, 22 - 28 ஆடி 2023 வாரமலர் பக்கங்கள் 18


# அறுத்து எறியப்பட்ட தொப்புள் கொடி...!

சர்வானந்தன்

மகாவம்சத்தில் 22ஆம் அத்தியாயத்தில் காமினி ஜனனம் என்ற பகுதியில் (துட்டகாமினி - துட்டகைமுனு என்பவர் மகாவம்சத்தின் காவிய நாயகன்) துட்டகாமினி தனது கை, காலை முடக்கிப் படுத்திருந்தவேளை அவனது தாய், "மகனே கை கால்களை நன்றாக விரித்துக் கொண்டு தாராளமாகப் படுப்பதற்கென்ன...?" என்று கேட்கிறாள். அதற்கு அவன், "அங்கே கங்கைக்கு அப்பால் தமிழர்கள் உள்ளனர். இந்தப் பக்கத்திலோ கோத சமுத்திரம் உள்ளது. கை கால்களை நீட்டிக் கொண்டு நான் தாராளமாகப் படுப்பது எங்கே...?" என்று பதிலளிக்கிறான். அன்று துட்டகைமுனுவுக்கு நிலவிய சூழ்நிலையே இன்று ஈழத்தமிழருக்கு நிலவிவருகிறது.

**தமிழ் நாட்டுத் தமிழரும் ஈழத்தமிழரும்**

மகாவம்சச் சிந்தனையின்படி பார்த்தால் 10ஆம் நூற்றாண்டில் சோழர்கள் படையெடுத்து வந்ததால் அனுராதபுரத் தலைநகரம் அழிக்கப்பட்டது. சிங்கள மன்னர்களும் மக்களும் சிதறித் தென் பகுதியை நோக்கி ஓடி ஒளித்தனர். பலர் கைது செய்யப்பட்டு வட இலங்கையில் குடியேற்றப்பட்டனர் (கோபியர், நளவர் சாதிகள்). இவை மகாநாமரின் தீர்க்க தரிசனத்தை மெய்ப்பித்தன. அதனால்தான் இன்றுவரை மகாவம்சம் சிங்களவர் மத்தியில் முக்கிய வரலாற்று நூலாகப் பேணப்பட்டு வருகிறது. அண்மையில் யுனெஸ்கோ நிறுவனம்கூட வரலாற்று நூல் என்ற வரிசையில் மகாவம்சத்துக்கு மதிப்



பளித்திருக்கிறது.
இலங்கைத் தமிழர்களையும் இந்தியாவிலுள்ள 8கோடித் தமிழர்களையும் இணைத்துப் பார்க்கும்போது சிங்களவர்களைவிடத் தமிழர்கள் பல மடங்கு அதிகமானவர்கள் என்பதால் இலங்கைப் பெரும்பான்மையினரான சிங்களவர் சிறுபான்மையினரான தமிழருக்குப் பயப்பிடுகின்ற நிலையே காணப்படுகிறது. சிங்களவர் மத்தியில் மகாவம்சம் தூண்டிய சிந்தனையும் இதுதான். இலங்கைத் தீவில் வடக்குக் கிழக்கு மாகாணங்கள் தமிழரின் பாரம்பரிய தாயக பூமியாகும். அவ்வாறு பார்த்தால் தமிழ் மக்களுக்கு அயலவர்கள் சிங்களவர்களே. இலங்கைத் தீவுக்கு வெளியில் பார்த்தால் தமிழ் நாட்டுத் தமிழர்தான் அயலவர்களாக உள்ளனர்.



தமிழ் நாட்டுத் தமிழரின் கோடிக்கணக்கிலான மக்கள் தொகை காரணமாகவே சிங்களவர் இலங்கைத் தமிழர் மீது காழ்ப்புணர்ச்சியுடன் காணப்படுகின்றனர். அதேவேளை தமிழருக்குத் தமிழ்நாடு என்ற ஒரு நிலையான இடம் இருப்பதால் இங்கிருக்கிற தமிழரும் இலங்கையில் இருக்கத் தேவையில்லை என்ற கருத்தும் சிங்களவர் மத்தியில் உண்டு. இந்த நிலமையைப் புரிந்துகொள்ளாது இரா.சம்பந்தன் போன்ற தலைவர்கள், "இந்தியா எங்களுக்குப் பின்னால் நிற்கிறது, தமிழ்நாட்டுத் தமிழர்கள் எமது தொப்புள்கொடி உறவுகள்" என்று பீத்திக்கொள்கிறார்கள். இது மகாவம்சம் கூறுவது சரிதான் எனச் சிங்கள மக்கள் பயப்பிடுவதில் நியாயம் உண்டு என்பதையே திரும்பத் திரும்ப நிறுவுகிறது.

**“சிங்களவர்கள் நினைப்பதுபோல தமிழ்நாட்டுத் தமிழரை யும் இலங்கைத் தமிழரையும் இணையவிடாது முரண்பாட்டைப் பேணுவதில் ஜெ.ஆர். ஜெயவர்த்தனா தொடக்கம் தற்போதைய அரசதலைவர் ரணில்விக்கிரமசிங்க வரை வெற்றி கண்டிருக்கிறார்கள்”**

### பன்றி இறைச்சி மீது வைத்துப் பன்றி இறைச்சியை வெட்டுவது

தமிழீழம் கோரி இந்திரா காந்தியின் அனுசரனையுடன் ஆயுதப் பயிற்சியை மேற்கொண்ட தமிழ் இயக்கங்களை முடக்குவதற்காக இந்தியாவுடன் இணைந்து ஒப்பந்தம் செய்தார் ஜெ.ஆர். ஜெயவர்த்தன. பிறிதொரு சந்தர்ப்பத்தில் அதுபற்றி அவர் கருத்து வெளியிட்டபோது இலங்கைத் தமிழர் நம்பியிருந்த தமிழ்நாட்டுத் தமிழருடன் ஈழத் தமிழ்ப் போராளிகளை முரண்பட வைப்பதில் தான் தீவிரமாக இருந்ததாகக் கூறினார். பன்றியிறைச்சியைப் பன்றியிறைச்சி மீதே வைத்து வெட்டுவேன் என்று அது பற்றிக் குறிப்பிட்டார். அவரது சிந்தனையே இறுதியில் வெற்றியும் பெற்றது. ஒப்பந்தத்தில் கையொப்பமிட்ட இந்தியத் தலைமை அமைச்சர் ரஜீவ்காந்தியைப் புலிகளே கொல்லுமளவுக்கு நிலமையை உருவாக்கியிருந்தார்.

### தமிழக, ஈழ மீனவர்கள்

சிங்களவர்கள் நினைப்பதுபோல தமிழ்நாட்டுத் தமிழரையும் இலங்கைத் தமிழரையும் இணையவிடாது முரண்பாட்டைப் பேணுவதில் ஜெ.ஆர். ஜெயவர்த்தனா தொடக்கம் தற்போதைய அரசதலைவர் ரணில்விக்கிரமசிங்க வரை வெற்றி கண்டிருக்கிறார்கள். இன்று வடக்கு மீனவர்களுக்கும் தமிழ்நாட்டு மீனவர்களுக்குமான முரண்பாடு மிக உச்ச நிலையில் உள்ளது. இலங்கைத் தமிழருக்கான கடற்பரப்புக்குள் நுழைந்து மீன்பிடிக்காது ஈழத்தமிழரின் வாழ்வாதாரத்தை உயர்த்தப்பாடுபடுவதாக எந்தவொரு தமிழகத் தலைவர்களும் கூறப்போவதுமில்லை. அத்துமீறாதிருக்கப் போவதும் இல்லை.
சிங்களக் கடற்படை தம்மைத் தாக்குகிறது, கைது செய்கிறது என்று தமிழ்நாட்டு மீனவர்கள் ஊடகங்களில் கூறுகின்றனரே தவிர தாம் இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறிக் களவாக மீன்பிடிப்பது, ஈழத்தமிழருக்குச் சொந்தமான வளங்களை அழிப்பது அதைச் சிங்களப் படைகள் தடுக்கின்றன என்றோ கூறுவதில்லை.
தமிழ்நாட்டு அரசு இப்படி வீம்புத்தனமாக நடந்துகொள்வதைத் தொப்புள் கொடி உறவுகள் என்று பீத்திக்கொள்ளும் இலங்கைத் தமிழ் அரசியல்வாதிகள் எவரும் சுட்டிக்காட்டு

**சிங்களக் கடற்படை தம்மைத் தாக்குகிறது, கைது செய்கிறது என்று தமிழ்நாட்டு மீனவர்கள் ஊடகங்களில் கூறுகின் றனரே தவிர தாம் இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறிக் களவாக மீன்பிடிப்பது, ஈழத்தமிழருக்குச் சொந்தமான வளங்களை அழிப்பது அதைச் சிங்களப் படைகள் தடுக்கின்றன என்றோ கூறுவதில்லை**

வதில்லை. தமிழக முதலமைச்சர் ஸ்ராலினுடன் பேசிச் சுமூகமான முடிவுக்கு வரமுடியாத சூழலே காணப்படுகிறது.

இது தமிழகத் தமிழருக்கும் ஈழத்தமிழருக்குமான தொப்புள்கொடி உறவு அறுத்து எறியப்பட்டுள்ளதையே காட்டுகிறது. இலங்கைத் தமிழ் மீனவர்கள் தொடர்பில் தமிழக அரசு கருத்தில் எடுக்காத நிலையில் டெல்லி அரசு ஒருபோதும் இதைக் கண்டு கொள்ளப்போவதில்லை. அதேவேளை தமிழ்நாட்டுத் தமிழருடன் ஈழத் தமிழர்கள் முரண்பட்டுக்கொண்டு இருக்க வேண்டும் என்ற சிங்கள ஆட்சியாளரின் எண்ணமும் எப்போதும் ஈடேறிய வண்ணமே இருக்கும். டெல்லியுடன் 13ஐப் பற்றிப் பேசும் தமிழ்த் தலைவர்கள் அதற்கு முதலில் தமிழ்நாட்டு மீனவர்கள் அத்துமீறலை நிறுத்துவதற்குரிய முன்னெடுப்புகளை மேற்கொள்ள வேண்டும்.

**திருகோணமலை பிராந்திய மையம்**

கடந்த வெள்ளிக்கிழமையன்று அரச தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடிக்கும் இடையில் பல ஒப்பந்தங்கள் நடந்திருக்கின்றன. 1987 ஜூலை 29இல் நடந்த இந்திய இலங்கை ஒப்பந்தத்தை மேலும் மேம்படுத்துவதாக இவை உள்ளன. இதில் இலங்கைத் தமிழருக்கான தீர்வு என்பது காத்துவாக்கில் பேசப்பட்ட விடயமாகவே உள்ளது. தமிழீழத்தின் தலைநகரம் என வர்ணிக்கப்பட்ட திருகோணமலை தற்போதைய புதிய ஒப்பந்தத்தின்படி இந்தியப் பிராந்திய மையாமாகத் தரமுயர்த்தப்பட்டிருக்கிறது. இதன் மூலம் பாதுகாப்பு, வர்த்தகம், கைத்தொழில் மையங்கள் போன்ற பல்வேறு விடயங்கள் இந்தப் பிராந்திய ஏற்பாட்டுக்குள் அடங்கவிருக்கின்றன. இனி மன்னாருடன் திருகோணமலையை அதி உயர் நெடுஞ்சாலையால் இணைக்கும் வேலைத்திட்டமும் முன்னெடுக்கப்படும். வடக்கும் கிழக்கும் அந்த வீதியால் நிர்வாக ரீதியாகப் பிரிக்கப்படவும் வாய்ப்புண்டு.

இந்தியாவைப் பொறுத்தவரை இலங்கைத் தமிழர் விவகாரம் அவர்களது பட்டியலில் இறுதியிடத்தில் கூட இருப்பதாகத் தெரியவில்லை. இந்தியாவும் இலங்கையும் தமது அரசியல், பொருளாதாரம், மூலவளம், பாதுகாப்பு போன்ற விடயங்களில் கைகோர்ப்பதால் இலங்கைத் தமிழரின் நிலை மகாவம்சத்தில் கூறப்பட்ட துட்டகைமுனுவின் நிலையைப்போல நீட்டி நிமிர்ந்து படுக்க முடியாத அளவுக்குச் சென்றிருக்கிறது.



# தேவையற்ற கொதிநிலைகளில் மக்களை ஆழ்த்தும் ஆட்சியாளர்கள்...!

நிதர்சன்

தற்போது இலங்கை மக்களின் பேசுபொருளாகப் பல புதிய விடயங்கள் நாளுக்கு நாள் உருவாகி வருகின்றன. ஏழை, பணக்காரர் என்ற பேதமின்றிப் பலதரப்பட்ட இலங்கைப் பிரஜைகளுக்குமுரிய பிரச்சினையாகத் திட்டமிட்டுப் பல பிரச்சினைகள் உருவாக்கப்படுகின்றன. அவற்றைச் சுமப்பவர்களாக மக்கள் உள்ளனர். வாகன விபத்துக்கள், மயக்க மருந்துப் பிரச்சினையால் இறக்கும் நோயாளர்கள், வகை தொகையின்றிய துப்பாக்கிச் சூடுகள், உயிர்மாய்ப்புகள், விவசாயிகள் பிரச்சினை, மீனவர் பிரச்சினை, சமயப் பிரச்சினை, லீசிங் கம்பனிகளின் பண மோசடிகள், சேமலாப நிதியப் பிரச்சினை, சைபர் குற்றங்கள், பாலியல் பிரச்சினைகள், போதைப் பொருள் பாவனை ஆகிய எல்லாமே இதில் அடங்குகின்றன. இவ்வாறாக உருவாகும் புதிய பல்வேறுபட்ட பிரச்சினைகளால் மக்கள் எப்போதும் ஒருவித கொதிநிலையில் வைத்துப் பேணப்படுகிறார்கள். அதனால் ஆட்சி, ஜனநாயக அரசியல் பற்றிச் சிந்திக்க முடியாமல் செய்யப்படுகின்றனர்.

மக்கள் எந்தவொரு விடயத்தில் இறங்கினாலும் அங்கு சாவுகளோ, இழப்புகளோ ஏற்படுகின்றன. அதன் மூல காரணத்தை ஆராய்ந்தால் குற்றங்களைத் தடுக்க வேண்டிய காவல்துறையினரின் கவனக் குறைவு, இலஞ்சம், ஊழல் என்பனவே காரணமாக உள்ளது தெரியவரும். அதற்கெதிராக மக்கள் நீதிமன்றம் சென்றாலும் குற்றத்துக்குக் காரணமானவர்கள் ஆளையாள் காப்பாற்றுவது அல்லது அதற்கு வேறு காரணத்தைத் தேடிக் கண்டுபிடிப்பது, அத்தகைய விடயங்களை ஆராய்ந்து கண்டுபிடித்துத் தற்போதைக்கு மக்களின் வாயை மூடுவதற்கு ஆணைக்குழு ஒன்றை அமைப்பது எனத் தொடர் கதையாக இந்த விடயங்கள் நீண்டு செல்கின்றன. இது ஆட்சியாளரைப் பொறுத்தவரை தமது ஆட்சிக்கு எதிராக எதுவும் நடக்கப்போவதில்லை என்ற நிலையில் கையாளப்படுகிறது.



**பிழையான மருந்துப் பாவனை**

ஒரு மருந்தைக் கண்டுபிடித்து அதைப் பரீட்சிக்கும் இடமாக ஆரம்ப காலத்தில் ஆபிரிக்க நாடுகள் காணப்பட்டன. கண்டுபிடிக்கப்பட்ட மருந்து நல்லதா, கெட்டதா? என முடிவு செய்வதற்காக ஆபிரிக்கக் குழந்தைகளும் பெண்களும் வயதானவர்களும் வகை தொகையின்றிச் சாக வேண்டியிருந்தது. அதேபோன்றதொரு நிலையே தற்போது இலங்கைக்கு வந்திருக்கிறது. இந்திய உதவித் திட்டத்தின் கீழ் பெறப்பட்ட சத்திர சிகிச்சைக்கான மயக்க மருந்துகள் தரமற்றவையாக இருந்ததால் சிறிய நோய்ப் பாதிப்புகளுக்கு உள்ளான பலர் இறந்துள்ளனர். கண் சத்திர சிகிச்சைக்குச் சென்றவர்கள்கூட அவர்களுக்குச் செலுத்தப்பட்ட மயக்க மருந்து காரணமாக இறந்துள்ளனர்.



இத்தகைய தவறான சுகாதாரத் தேவையின் செயற்பாடுகளுக்கு அதற்குப் பொறுப்பான அமைச்சர் பதவி விலக வேண்டும். ஆனால் அதை விடுத்து அல்லது தவிர்த்து ஏனைய மார்க்கங்கள் பற்றிச் சிந்திப்பது என்பது நடந்த தவறுகளை மூடிமறைப்பதாகும்.

**தமிழ்த் தலைவர்களின் மௌனம்**

இந்திய மயக்க மருந்துகளால் இலங்கையில் மக்கள் இறக்கிறார்கள் எனவே அத்தகைய மருந்துகளை அனுப்ப வேண்டாம் என்று சம்பந்தனோ விக்கினேஸ்வரனோ கஜேந்திரகுமாரோ சுரேஷ்பிரேமச்சந்திரனோ ஏனைய தமிழ் அரசியல்வாதிகளோ இந்தியத் தலைமை அமைச்சர் மோடிக்கு இதுவரை கடிதம் அனுப்பவில்லை.

**தமிழ் கட்சிகளின் கையில் அரசியல் நடத்துவதற்கு எது வும் இல்லாத நிலையில் எந்த விடயம் அகப்பட்டாலும் அதை வைத்து மக்களை அணிதிரட்ட வேண்டிய நிலையே காணப்படுகிறது**

இது விடயத்தில் இந்தியாவை குற்றம்சாட்ட இவர்கள் முன்வரப்போவதில்லை.

இந்த மருந்துகளின் தன்மை பற்றி ஆராய்வதற்கு 5பேர் கொண்ட குழு ஒன்றை அரசதலைவர் ரணில் விக்கிரமசிங்க அமைத்திருப்பதுடன் அதற்கான அறிக்கையினை அவசரமாகச் சமர்ப்பிக்குமாறும் கேட்டிருக்கிறார். பிரச்சினைக்குரிய மருந்து வகை பற்றி அவசரரமாக ஆராய முடியாது என்பது மிகச் சாதாரண மக்களுக்குத் தெரிந்திருப்பினும் அவசர அறிக்கை என்பது இந்தியாவைப் பகைத்துக்கொள்ளாத அல்லது அந்த மருந்து கூடாது எனக் குறிப்பிடாத அறிக்கை யாகவே இருக்கப் போகிறது.



**மன்னம்பிட்டி பஸ் விபத்து**

மன்னம்பிட்டிப் பாலத்தில் அண்மையில் நடந்த விபத்தில் 11பேர் இறந்தும் பலர் காயப் பட்டும் உள்ளனர். இதுபற்றிய முதல் அறிக்கையில் அந்தப் பேருந்துக்கு வீதி அனுமதி இல்லை என்பது தெரியவந்தது. அதேவேளை குறிப்பிட்ட சாரதி ஏற்கனவே வீதிப் போக்குவரத்துக் காவல்துறையினரால் எச்சரிக்கப்பட்டவர் என்றும் தெரிய வந்தது. இதன் மூலம் தெரியவரும் விடயம் பயணிகள் செல்லும் பேருந்தை இயக்கத் தகுதியில்லாத ஒருவரைக் காவல் துறையினர் தொடர்ந்தும் அனுமதித்திருக்கின்றனர் என்பதே. வீதி அனுமதி கேட்கும்போதெல்லாம் அந்த ஆவணத்துக்குப் பதில் கையூட்டு வழங்கப் பட்டிருக்கிறது என்பதும் இதில் மறைந்திருக்கிறது. சட்டத்தை நடைமுறைப்ப டுத்த வேண்டிய காவலர்களின் பொறுப்பற்ற செயற்பாடே இந்த விபத்துக்குக் காரணமாகும்.

**சாணக்கியனின் அரசியல்**

மன்னம்பிட்டி பஸ் விபத்து மற்றும் தனியார் பேருந்துகள் பிள்ளையானின் ஆதரவாளர்களால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றும் அதேவேளை மட்டக்க ளப்பில் புதிதாக 3 சாராயக் கடை களை பிள்ளையானின் ஆதரவாளர் கள் திறக்கவிருக்கின்றனர் என்றும் அதை எதிர்ப்பதாகவும் தமிழ் அர சுக் கட்சி உறுப்பினர்கள் ஆர்ப்பாட் டத்தில் ஈடுபட்டனர். இந்தக் குழப்பங்கள்கூட ஆட்சியாளருக்குச் சாதகமானதே. தமிழ் கட்சிகளின் கையில் அரசியல் நடத்துவதற்கு எது வும் இல்லாத நிலையில் எந்த விடயம் அகப்பட்டாலும் அதை வைத்து மக்களை அணிதிரட்ட வேண்டிய நிலையே காணப்படுகிறது.

**தமிழரின் பிரச்சினை மதப்பிரச்சினை**

தற்போது இலங்கைத் தமிழருக்கு சமஷ் டித் தீர்வு அவசியம் என்பதும் 13போதும் 13போதாது என்ற விவாதங்களும் இடம் பெற்று வரும் நிலையில் குருந்தூர் மலைப் பிரச்சினை மூலம் தமிழ ருக்கு இருக்கும் பிரச்சினை மதப் பிரச்சினை மட்டுமே என்ற தவறான தோற்றப்பாட்டை ஏற் படுத்தி அதில் ஆட்சியாளர்கள் வெற்றியும் கண்டிருக்கின்றனர்.

**புத்தர் சிலையும் காணி அளவீடும்**

புத்தர் சிலைகளைப் புதிதாக வைப்பது அல்லது படை யினர் தமது தேவைக் காகக் காணி பிடிப்ப தற்காக நில அளவைத் திணைக்களம், காணி அளவீடு செய்கிறது என்று கதையைக் கட்டி விட்டாலே தமிழ்க் கட்சிகள் எல்லாம் ஆளுக்காள் போட்டி போட்டுக் கொண்டு அந்த இடத்துக்கு ஓடிச் சென்று எதிர்ப்பு ஆர்ப்பாட் டத்தில் ஈடுபடும் நிலை அண்மைக் காலமாக அதிகரித்து வருகிறது. தமிழ்த் தேசியக் கட்சிகள் பலவற்றிடம் மக்க ளுக்கு உதவக்கூ டிய எந்த வேலைத்

திட்டமும் கைவசம் இல்லாததால் எதையாவது எதிர்த்துத் தமது முக்கியத்துவத்தைக் காட்டி அடுத்து வரும் தேர்தல்களில் வென்றுவிட வேண்டும் எனத் தமக்குள் போட்டி போடும் நிலை காணப்படுகிறது. ஒரு குறிப்பிட்ட பிரச்சினையில் யார் முதலில் களமிறங்குவது என்பதைக்காட்டிவிடுவதற்கும் இவர்களுக்கிடையில் அக்கப்போர் நடக்கிறது.

**சிறில் நெத்தியூவும் சரத் வீரசேகரவும்**

தற்போது குருந்தூர் மலை விவகாரம் வடக்குக் கிழக்குத் தொல்லியல் திணைக்கள விவகாரங்களில் அதிகம் முன்னிலையில் நிற்பவர் முன்னாள் கடற்படை அதிகாரியும் தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினருமான சரத் வீரசேகர. இவரது செயற்பாடுகள் தவறான தோற்றத்தைத் தமிழர் மத்தியில் ஏற்படுத்தினாலும் பெரும்பான்மைச் சிங்களவர் மத்தியில் செல்வாக்குள்ள செயற்பாடுகளாக இருக்கின்றன. அண்மையில் முல்லைத்தீவு நீதவானுக்கு எதிராகவும் தனது கருத்துக்களை வெளிப்படையாக நாடாளுமன்றில் கூறினார். இது ஜெ.ஆர். ஜெயவர்த்தனவின் காலத்தில் அமிர்தலிங்கத்துக்கு எதிராகச் சிறில் மத்தியூ குரல் கொடுத்ததற்கு ஒப்பானது. சரத் வீரசேகர சிறில் மத்தியூ போன்றவர்களைக் காட்டியே தமிழ்த் தேசிய வாதிகள் தமது அரசியலையும் கொண்டு செல்லக்கூடிய வாயப்புக் கிடைத்திருக்கிறது.



இவ்வாறாகத் தற்போது சமூக, பொருளாதார, அரசியல் விடயங்களைத் தவிர்த்து வேறு பல விடயங்களில் மக்கள் கொதிநிலையில் வைத்திருக்கப்பட்டு வருகிறார்கள். மக்களைக் கையாளக்கூடிய வகையிலேயே இந்த விடயங்கள் திட்டமிடப்பட்டிருப்பது தெரிகிறது. சட்டத்தை மீறவும் களவு செய்யவும் ஊழல் செய்யவும் இலங்கையைப்போல சிறந்த நாடு இருக்க முடியாது. இதில் ஈடுபடுபவர்களே அடுத்த தேர்தலைத் தீர்மானிக்கும் சக்தியாக இருக்கப் போகிறார்கள். அடுத்த தேர்தல் வரை நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள கொதிநிலை குறைய வாய்ப்புகள் இருப்பதாகத் தெரியவில்லை. மேலும் பல புதுப் பிரச்சினைகள் உருவாக்கப்படவும் சிறுபான்மை இனங்களின் பலம் குறைக்கப்படவும் முரண்பாடுகள் அதிகரிக்கவுமே வாய்ப்புகள் உள்ளன.



# சிறைப்பிடிக்கப்பட்ட எனக்குப் புலிகள் பிறந்த நாள் பரிசு தந்தார்கள்

**மொழியாக்கம்
கமலநாதன்**

(கடந்த வாரத் தொடர்ச்சி)

கடற் புலிகளுடனான மோதலில் எனது தோளில் துப்பாக்கிச் சூடு பட்டது. குருதி வெளியேறிக்கொண்டிருந்தது. சிறிது நேரத்தில் நான் மயங்கிவிட்டேன். நினைவு திரும்பியபோது கடற் புலிகளின் கப்பலில் ஏற்றப்பட்டிருந்தேன். பெண் போராளி ஒருவர் எனக்குக் குடிக்கத் தண்ணீர் தந்தார். அந்தக் கப்பலில் பெரிய ஆயுதம் பொருத்தப்பட்டிருந்த கீழ்ப்பகுதி இரும்பில் எனது கைகளைக் கட்டியிருந்தார்கள். எனது காயங்களுக்கு முதலுதவி செய்திருந்தார்கள். தாகம் அதிகமாக இருந்தது. அவர்கள் தண்ணீர் தந்தார்கள். அந்தத் தண்ணீரில் நஞ்சு கலந்திருக்கலாம் என்ற சந்தேகத்தில் தண்ணீர் வேண்டாம் என்றேன்.

இது தண்ணீரல்ல ஸ்பிறைட் சோடா என்றார்கள். அவர்களிடம் அகப்பட்டுவிட்டேன் இனி என்ன என்ற முடிவுடன் அதை வாங்கிக் குடித்தேன்.

**லொக்கா சுட வேண்டாம் என்றார்**

படகிலிருந்த கடற்புலிகளுக்குச் சிங்களம் பேசத் தெரியாவிட்டாலும் எனக்கு விளங்கும் வகையில் கதைத்தார்கள். பயப்பிட வேண்டாம் லொக்கா உங்களைச் சுட வேண்டாம் என்று கட்டளையிட்டிருக்கிறார் என்று அவர்கள் கூறியதைப் புரிந்துகொண்டேன். கரையை அடைந்ததும் என்னை ஏற்றிச் சென்ற படகை பெரிய ரக்ரர் பெட்டி போல வடிவமைக்கப்பட்ட இரும்புப் பெட்டியில் ஏற்றி அதை ரக்ரருடன் இணைத்து இழுத்துச் சென்றார்கள். கரை ஏறியதும் எனது கண்களைக் கட்டினார்கள். புலிகள் கைதிகளாகப் பிடிக்கப்படுபவர்களின் குருதியை எடுப்பார்கள். சில உடல் உறுப்புகளையும் எடுப்பார்கள் என்று நான் கேள்விப்பட்ட விடயங்கள் ஞாபகத்துக்கு வந்தன. என்னை ஒரு வாகனத்தில் ஏற்றி 50 கிலோ மீற்றர்கள் தூரம் வரை கொண்டு போனார்கள். பின்னர் நான் கிளிநொச்சியிலிருந்த மருத்துவமனை ஒன்றில் அனுமதிக்கப்பட்டேன். அது புலிகளின் மருத்துவமனை என்று நினைத்தேன். பின்னர் தான் தெரிந்தது அது அரச மருத்துவமனை என்று.




**அங்கிருந்த பணியாளர்கள் எல்லோரும் என்னுடன் அன்பாக நடந்துகொண்டார்கள். நான் எதிர்பார்த்த கெட்டவை எவையும் நடக்கவில்லை. புலித்தேவன் வந்து என்னைப் பார்த்தார்.**

**புலித்தேவன் வந்தார்**

கிளிநொச்சி மருத்துவமனையில் எனக்கு முறையான மருத்துவம் செய்தார்கள். அங்கிருந்த பணியாளர்கள் எல்லோரும் என்னுடன் அன்பாக நடந்துகொண்டார்கள். நான் எதிர்பார்த்த கெட்டவை எவையும் நடக்கவில்லை. புலித்தேவன் வந்து என்னைப் பார்த்தார். பயப்பிட வேண்டாம் என்று கூறினார். நீங்கள் கைதாகியுள்ள விடயத்தைத் தமிழ் நெற்றில் போடுவோம் என்றார். அவ்வாறு வெளிப்படுத்தினால் என்னைக் கொல்ல மாட்டார்கள் என்று நம்பினேன். கிளிநொச்சி மருத்துவமனையில் 3 மாதங்கள் சிகிச்சை பெற்றேன். மருத்துவர்களும் தாதிமாரும் மிக அன்பாக நடந்துகொண்டார்கள். அதன் பின்னர் பன்னாட்டுச் செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள் வந்து என்னைச் சந்தித்தார்கள். நான் உயிருடன் நலமாக இருக்கிறேன் என்று அவர்களின் கடிதத் தாளில் எழுதி எனது வீட்டுக்கு அனுப்பும் வாய்ப்புக் கிடைத்தது. போராளிகள் பலர் வந்து என்னைப் பார்த்துச் சென்றார்கள். நவம்பர் 13ஆம் திகதி வந்து இன்று உங்களின் பிறந்த நாள் என்றுகூறி சாரம், சேர்ட், பரிசுப் பொருள்கள் தந்தார்கள்.

**கனகபுரம் சிறைச்சாலை**

எனது பிறந்த நாள் அன்று தமிழீழக் காவல்துறையின் பிக்கப் வாகனம் ஒன்றில் ஏற்றிச் சென்று கனகபுரத்திலிருந்த சிறைச்சாலைக்கு அழைத்துச் சென்றார்கள். அது ஒரு வீடு. அங்கு முற்றத்தில் புலிக்கொடி ஏற்றப்பட்டிருந்தது. உங்கள் நண்பர்கள் இங்குதான் இருக்கிறார்கள். என்று



கதிரேசன் காத்தவராயன்

# ஆறப்படிச்ச பல்லியளெண்டிறது இதுகளையோ?

அண்டைக்கதிலை சுப்பிரமணியம்மாஸ்ரர் வீட்டடிக்குப் போயிருந்தன். அங்கை முருகேசர் மாஸ்ரரோடை இருந்து கதைச்சுக்கொண்டிருந்தார். என்னைக் கண்ட மாஸ்ரர் உற்சாகமாய் வரவேற்றார்.நானும் அதிலை இருந்துகொண்டன். 'என்ன மாஸ்ரர் இந்த வெக்கையை நிப்பாட்டச் சொல்லிச் சொல்லமாட்டியளோ?' எண்டன்.

சிரிச்சினம். 'நானும் ஆக்களைத் தேடுறன்... கண்டு பிடிக்கேலாமலுக்கல் லேகிடக்குத' எண்டு மாஸ்ரர் சொல்ல அதுக்கும் பிலத்தாய்ச் சிரிச்சம். அந்தநேரம் சுதனும் ரண்டு கூட்டாளியளோடை வந்து சேந்தான். எல்லாம் வழக்கமாய் வாற பெடியள்தான். அறிமுகச் சிரிப்போடை இருந்துகொண் டாங்கள். அவங்கள் இருக்கவும் கனகர் வரவும் சரியாய் இருந்துது. 'என் னப்பா இந்த வெக்கை...வறுத்துக் கொல்லுது...' எண்டபடி இருந்து கொண்டார்.

'சரியாத்தான் சொன்னீங்கள் அங்கிள்... காலநிலை சரியான மோசமா யல்லே போய்க்கொண்டிருக்கு...' எண்டு ஒரு பெடியன் சொல்லிப் பெரு மூச்சு விட்டான். 'அனல்க்காத்து சூரியப்புயல்...அது இதுவெண்டல்லே செய்தியளிலை அடிபட்டது?' எண்டார் கனகர். அந்த நேரம் சுதனின்ரை போன் சத்தம்போட்டுது. சுதன் எழும்பிப்போய் அங்கலை நிண்டு கதைச்சுப்போட்டுச் சிரிச்சபடி வந்தான்.

'என்னடா சிரிப்போடை வாறாய்? ஏதோ பம்பலான கதையோ?' எண்டு நான் கேக்க 'ஓஓஓமோம்...நாளைக்கு எங்கடை போட்டி இல்லை யாம்... விளையாட்டேதோ நடக்கப்போகுதாம்...' எண்டு சுதன் முடிக்க யில்லை 'என்னடாப்பா? விளையாட்டுப் போட்டியோ? நாங்கள் இந்த



கூறினார்கள். கடலில் எனது டோறாப் படகைப்போல இன்னோர் டோறாப் படகும் சேதமான நிலையில் புலி களால் கைப்பற்றப்பட்டிருக்கிறது. அதிலிருந்த கேவகே என்பவரும் குமாரசிறி என்பவரும் கைதாகியிருக் கிறார்கள் என்று தெரிந்துகொண் டேன். என்னை உடற்பரிசோதனை செய்து உள்ளே எடுத்தார்கள். இனி என்ன நடக்குமோ என்ற பயம் ஏற்பட்டது. என்னையும் அவர்கள் இருந்த சிறை அறைக்குள் வைத்துப் பூட்டினார்கள். கைவிலங்கு போட் டார்கள். சாப்பட்டு நேரத்தில் மட் டும் கைவிலங்கு கழற்றப்படும். காலை 6 மணிக்குக் காலைக் கடன் கழிக்க வெளியில் எடுப்பார்கள். ஏனைய நேரத்தில் சிறுநீர் கழிப்பதற் குப் பிளாஸ்ரிக் போத்தல்களைத் தந்தார்கள்.

அரவிந்தன் என்பவர் அந்தச் சிறைக்குப் பொறுப்பாக இருந்தார். புலிகளின் கேணல் தரத்தில் அவர் இருந்தார். சாப்பாடு வெளியிலிருந்து கொண்டுவந்து தருவார்கள். உதய குமார் என்று இன்னோர் பொறுப் பாளரும் சார்ஜன்ட் மணியம் (பெரிய மீசை வைத்தவர்) என்றொரு பொறுப்பாளரும் இருந்தனர்.

எங்களைச் சந்திக்கவரும் பன்னாட்டுச் செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகளிடம் கதைத்து எமது கைவிலங்கைக் கழற்றிவிட்டு அறை யில் அடைத்து வைக்குமாறு கேட் டோம். புலிகள் அதற்குச் சம்மதிக்க வில்லை. எங்களைப் பார்ப்பதற்கு எமது குடும்பத்தினரை அழைத்து வரும் ஏற்பாடுகளைச் செஞ்சிலு வைச் சங்கத்தினர் மேற்கொண்டனர். அதன் பின்னர் என்னைப் பார்ப்ப தற்காக அம்மாவும் அப்பாவும் வந்தார்கள்.

(தொடரும்)

துன்பானந்த சுவாமி

20

# மீட்டல்...

ஐஞ்சு மணிப்பொழுதிலையே புலம்புறம்...பெடி பெட்டையள் என்ன பாடப்பா படுங்கள்?' எண்டு முருகேசர் கொதிச்சார்.

'அந்தந்தக் காலத்திலை அதையதைச் செய்ய வேணுமெண்டு கடிதம் வந்திருக்கும்..' எண்டு நிப்பாட்டினார் மாஸ்ரர். 'உண்மைதான் சேர்... வெய்யிலுக்கை வராத ஆக்கள்தானே...கஸ்ர நட்டம் விளங்காதல்லே?' எண்டான் ஒரு பெடியன் எரிச்சலோடை. 'வாகனங்களிலை திரியிற வைக்கு வெய்யில் வெக்கை எங்கை விளங்கப் போகுது?' எண்டான் மற்றவன்.

'தவணைச் சோதினை ஒரு பக்கம்...அந்தப் போட்டி இந்தப் போட்டியெண்டு எல்லாத்தையும் ஒண்டுக்கையொண்டு போட்டுக் குழப்பியல்லே வைச்சிருக்கினம்?' எண்டான் சுதன். :அதுக்குள் ளைபகிடி ஒரே கட்டிடத்திலைதான் இருக்கினம்... ஒராள் தன்ரை போட்டியை அறிவிக்கும்..மற்றாள் அதே நாளிலைதன்ரைபோட்டியை அறிவிக்கும்... ஆளோடையாள் கதைச்சுப் பேசி ஒண்டையும் செய்யிறேல்லை' எண்டு ஒரு பெடியன் கொதிச்சான்.

'ஏன் தம்பியவை உங்கடை பெரியவை உந்தத் திட்டமிடல் இந்தப் பிளானிங் அது இது வெண்டெல்லாம் படிச்சவைதானே? பேந்தேனப் பனவை குழப்பம்?' எண்டு கேட்டார் கனகர் அப்பாவித்தனமாய். 'படிச்சால் சோதினையளிலை பாஸ் பண்ணினால் காணுமே? முன்னனுபவம்... பரந்த நடைமுறையறிவு... கூட்டுப் பொறுப்பெடுக்கிற தன்மை அதுகளுமல்லே இருக்கவேணும்' எண்டார் முருகேசர்.

'சரியாத்தான் கண்டுபிடிச்சிருக்கிறீர் முருகேசு... உண்மைதான் நீர் சொல்லுறது.. உதுகளுக்கை ஆர் பெரிசு எண்டிறவிதமான ஒரு பக்கமும் குழப்பங்களுக்குக் காரணம்...பிள்ளையளை மையப்படுத்தின கல்வி எண்டிறதோடை சரி தங்கடை வேலையள் முடிஞ்சாச் சரி எண்டுதான் நடக்கினம்' எண்டார் ஒரு பெருமூச்சோடை மாஸ்ரர்.

'அதுதான் சேர்... அதுதான் காரணம்... தங்கடவேலை முடிஞ்சால் சரி... ஆருக்காகச் செய்யிறம் ஏன் செய்யிறமெண்டு ஒரு விதமான யோசினையும் இல்லாமல்தான் நடக்கினம். 'எண்டான் மற்றாள். 'பிள்ளையள் மாறிமாறி ஒவ்வொரு போட்டியாய் ஓடிக்களைச்சுப்போறது தான் மிச்சம்' எண்டு சிரிச்சார் முருகேசர். 'பிள்ளையளும் களைக்காது...வாத்திமாரும் கழைக்காயினம்...பெற்றாரல்லே அலைஞ்சு திரியுதுகள்...'எண்டு கனகர் சொல்ல 'ஓமோம்... பிறக்ரிஸ் எண்டு..ரியூசனெண்டு அதோடை போட்டியளெண்டும் பெற்றார் படுகிற பாடு?' எண்டார் முருகேசர்.

'அறப்படிச்ச பல்லி கூழ்ப்பானைக்கை விழுந்துதாம் எண்டிறபழமொழியைக் கண்டு பிடிச்சவன் மட்டும் நிச்சயமாய்ப் படிக்காத ஆளாய்த்தான் இருந்திருப்பான்..என்ன?' எண்டு கொண்டு வீட்டை வர எழும்பி வந்திட்டன்.



மூடநம்பிக்கைகள், கற்பிதங்கள் என சில விடயங்களிலுள்ள பாதக விளைவுகளை எம்முன்னோர் அனுபவித்து பாதிப்புக்களுக்கு உள்ளாகியுள்ளர் என்பது யதார்த்தமானது. ஆனால் அதற்காக முற்றுமுழுதாக அவற்றை ஓரங்கட்டிவிட முடியாது. அப்படிச் செய்யவும் கூடாது. நாம் கற்பிதங்கள் மூடநம்பிக்கைகள் என்று பழையவற்றை உதாசீனம் செய்கிறோம். ஆனால் இன்றைய மேம்போக்கான இணையக் கருத்துகளையும் விளம்பரங்களையும் கொண்டாடுகிறோம்.

நாகரீகம் என்கிற போர்வையில் நாம் தொலைத்துக்கொண்டிருக்கும் இன்னொரு விடயம் உபசரிப்பும் விருந்தோம்பலும் என்பது கவனத்திற்குரியது. இன்று அனேகரைத் தெரியும். ஆனால் அன்று உறவுகளைத்தான் அதிலும் ஊர் அயலூர் என ஒரு குறுகிய வட்டமாகவே அறிமுகங்கள் இருந்தன. ஆனால் முழுமையான அறிமுகமிருந்தது. வீடுகள் பரிச்சயமாக இருந்தன. இப்போதுஉறவுகளை ஊர் என்பதற்கப்பால் கடல் கடந்து கண்டங்கள்தாண்டி கொண்டிருக்கிறோம். அனேகமாக யாருடையதும் வீடகளைத் தெரியாது.

வீடு என்று இங்கு குறிப்பது முகவரி, வாழ்சூழல், வாழ்க்கைமுறை போன்றவற்றினது சுருக்கக்குறியீடே. நேரடித் தொடர்பு இருந்தது. அது ஒருவிதமான இறுக்கமான பிணைப்பை ஏற்படுத்தியிருந்தது. இப்போது நிலைமை நேர்மாறாகவே அனேகமாக உள்ளது. தொலைபேசியும் இணைய

வலையமைப்பும் உலகைச் சுருக்கி விட்டதாகப் பெருமை கொள்ளும் நாம் உறவுகள் வரிசலடைவதை உணர வில்லை. கடிதக்காரன் தேவையற்றவ னாகி விட்டான். வீட்டு நிகழ்வுகளுக்கு நேரில் சென்றழைக்கும் வழக்கம் குறைந்து வருகிறது. தகவல்தொடர்புச் செயலிகளை நம்பிய வாழ்வுக்குள் சென்றுகொண்டிருக்கிறோம். இவை தொடர்பில் பேசுவதற்கு நிறையவே உள்ளன. பின்பொருநாளில் விரிவா கப் பேசுவோம்.

உறவுகளை அழைத்தல் என்கிற பண்பாட்டை எப்படி இழந்துகொண்டி ருக்கிறோம் என்பதற்காகவே பேச வேண்டியதாயிற்று. விருந்தோம்பல் என்பது அழைப்பதில் தொடங்கு கிறது. அழையா விருந்தாளிகளையும் வரவேற்பது எமது பண்பாடென்பது முக்கியமானது. ஏதோ ஒருமுறையில் அழைப்;பை விடுக்கிறோம். அதனை ஏற்றுமதித்து வருகிறவர்களை எப் படி உபசரிக்கிறோம் என்பது வேத னையான வேடிக்கையாகவே இருக் கிறது.

முன்னர் பலமுறை பேசியபடி பொதிமுறையில் வரும் உபசரணைக் கான பொருட்களுடன் விழாக்கள் நடைபெறுகின்றன. அவை எப்படியா னவை என்பதபற்றி நிறையவே பேசியாகிவிட்டது. முன்னர் வீடுதேடி வந்தவரை இருத்தி முதலில் குடிபா னம் வழங்கி தாகம் தீர்த்து களைப் பாற்றினோம். பானம் வழங்குவது குடும்ப உறுப்பினர்களே என்பது கவனிக்கத்தக்கது. இன்று விழாக்கள் வீடுகளில் நடப்பதே குறைந்து வருகிறது என்பது ஒரு புறமிருக்கிறது. குடிபானம் என்பது எப்படியும் திடீர்த்தயாரிப்புகள் என்பதும் அவற் றைக்கூட வழங்குவது பணியாளர் களே என்பதும் கவனிக்கத்தக்கன.

பணியாளர்கள் வெறுமனே உபச ரிப்பை தமக்கிடப்பட்ட ஒரு பணியா கவே கருதுவதால் உபசரிப்பில ஒரு விதமான ஈர்ப்போ அக்கறையோ இருப்பதில்லை. செயற்கையாகவே இருக்கிறது. விருந்துக்காக அழைக் கப்பட்டவர்களில் சமூகத்தில் முன் னிற்கின்ற வயதில் மூத்த ஒருவருக்கு செம்பு நிறைந்த நீர் வழங்கி மரியா தையோடு அழைக்கின்ற பண் பாட்டை இன்று தொலைத்துவிட் டோம்.

அழைக்கப்பட்ட விழா எதுவாயி ருந்தாலும் அவ்விழாவினது ஒரு கட்டத்தில் சபையிலிருந்து எழுந் தோடி இடிபட்டு வரிசையில் நிற்பது இன்றைய வழக்கமாகிவிட்டது. வயதில் மூத்தவர்கள் படுகிற கஸ்டம் என்பதை வார்த்தையில் சொல்லிவிட முடியாது. பந்திப்பாய் என்றால் என்ன எனக்கேட்கிற ஒரு சந்ததியாகிவிட் டோம். பலருக்கு நிலத்தில் இருக்கக் கூடிய நிலையில் உடலும் உடைக ளும் தற்போது இல்லை. அதனால் கதிரை மேசை. வாழையிலையை மேசை யில் போடமுடியாது. தட்டுகள்தான் தஞ்சம்.

அந்தத் தட்டுக்களுக்கு மென்நெகி ளித்தாள் இட்டு ஒன்றன்மீதொன்றாக அடுக்கும்போது ஒரு தட்டினது அடிப்பகுதியில் ஒட்டிக்கொண்டிருக் கும் அழுக்குகள் மற்றைய தட்டில் உள்ள மென்நெகிளித்தாளில் படி கிறதே என்கிற கவலை யாருக்கும் எழுவதாகக் காணமுடியவில்லை. பல இடங்களில் பாவனையிலுள்ள தட்டுக்களின் அளவு சரியானபடி உணவை இட்டுக்கொள்ளும் அளவா னதாக இல்லையென்பதும் குறிப் பிடத்தக்க ஒன்று. இப்படியாக உள்ள உபசரணைக்குத்தான் இடிபட்டு நெருக்குப்பட்டு ஓடுகிறோமே என்று வெட்கமோ கவலையோ யாருக்கும் இருப்பதாகவும் தெரியவில்லை.

வாழையிலையில் ஒரு ஒழுங்கில் உறவுகளால் பரிமாறப்படுகிற கறி களையும் சுடச்சுட சோற்றையிடும் போதெழுகிற வாழையிலை வெந்தெ ழும் நறுமணத்தையும் தாராளமாகக் குழைத்து சுவைக்கும் சுகத்தையும் எமது தலைமுறை தொலைத்துள்ளது. வாழையிலையில் ஓடும் பாயாசத்தை மறித்து பக்குவமாக அள்ளி வாயிலி டும் அலாதியான சுகத்தையும் இழந் தாயிற்று. இழந்துபோன இந்த சுகங் களைப் பற்றியும் அதனோடிணைந்த ஆரோக்கியத்தையும் பற்றிப் பேச நிறையவே உள்ளன. பேசுவோம்.

---

## இந்த வாரச் சொல்

## வலு

வலு என்கிற சொல் யாழ்ப் பாணப் பேச்சு வழக்கில் துணை வினைச் சொல்லாகப் பயன் படுத்தப்படுகிறது. இன்னோர் சொல்லுக்கு முன்னால் இந்தச் சொல்லைச் சேர்க்கும்போது வேறுபட்ட அர்த்தங்களையும் கொடுக்கிறது. அத்தோடு வலு என்ற சொல் சக்தி என்ற பெயர்ச் சொல்லாகவும் பாவிக்கப்படுகிறது.

"அவனை வலுக்கட்டாயமாகக் கூட்டிக் கொண்டு போய்க் கொல்லக் குடுத்தவங்கள்"

"வலு அட்டகாசமாக ஓடித்திரியுறான்"

"வலு உற்சாகமாகப் பயிற்சி செய்யிறாங்கள்"

"வலு மோசமான வேலையைச் செய்யிறாங்கள்"

"வலு லேசாகக் கிளப்பிக்கொண்டு போயிற்றாங் கள்"

"வலுவேகமாக இழுத்துக்கொண்டு போறாங்கள்"

"அவங்கடை குடும்பம் இப்ப வலுவிழந்து போயிற்றுது"

"என்ன இந்த வெயிலுக்கிளால வலு ஆறுதலாய் நடந்து போறாய்?"

"அந்தக் கலியாணத்தை வலு ஆடம்பரமாய்ச் செய்தவங்கள்"

"அந்தப் பெட்டயை வலு கவனமாய் வளர்ந்த வங்கள் ஆனால் அது இப்படிச் செய்துபோட்டுது"

"அந்த வாத்தியார் வலு கவனமாய்ப் படிப்பிப் பார்"

"தேர்தல் வந்தால் மட்டும் வலு உற்சகமாய் ஓடித் திரிவாங்கள்"

"அந்தக் குளத்தில வலு வேகமாகத் தண்ணி வத் திக்கொண்டு போகுது"

"அந்தச் சந்தையில் மீன் வலு மலிவாக வாங் கலாம்"



03

அருண்பாக்யா

# மிக நுட்பமாகக் கட்டமைக்கப்பட்ட யாழ்ப்பாணத்துச் சாதியம்

**போர்த்துக்கேயர் காலத்தில் வேளாளர்**

கி.பி 1505 களில் போர்த்துக்கேயர் இலங்கையில் வந்திறங்கியபோது யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஊர்காவற்றுறை, நெடுந்தீவு, குருநகர், பாசையூர், கொழும்புத்துறைப் பகுதியைச் சேர்ந்தவர்கள் கத்தோலிக்க மதத்துக்கு மாறிப் போர்த்துக்கேயரின் ஒடுக்குதலில் இருந்து தம்மைக் காப்பாற்றிக்கொண்டனர். கத்தோலிக்க மதத்துக்கு மாறாத தமிழர்கள் சங்கிலி மன்னனுடன் சேர்ந்து தமக்கேதிராகக் கிளர்ச்சி செய்யக்கூடும் என்று எண்ணினர். ஊர்காவற்றுறை, கரம்பன் பகுதிகளில் வாழ்ந்த வேளாளர்கள் தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காக அதிகளவில் கத்தேலிக்க மதத்தில் இணைந்தார்கள். அதேவேளை யாழ்ப்பாணம் - நல்லூர்ப்பகுதிகளில் வாழ்ந்த வேளாளக் குடும்பங்கள் தாம் சங்கிலிய மன்னனின் ஆட்கள் என அடையாளம் காட்டாதிருக்கவும் போர்த்துக்கேயரிடம் சலுகைகளைப் பெறுவதற்காகவும் கத்தோலிக்க மதத்துக்கு மாறினர். தொடர்ந்தும் அதை ஆதரித்தவர்கள்போகப் பலர் தமது பூர்வீக மதத்தைப் பின்பற்றினர். தற்போது இந்து வேளாளர்களாகக் காட்டிக்கொள்கின்ற பல குடும்பங்களின் மூதாதையர்கள் தொன் யுவான் என்ற அடைமொழிச் சொல்லுடன் கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தனர்.

**நிர்வாகத்தில் முக்கிய பணிகள்**

யாழ்ப்பாண மன்னராட்சியின் கீழ் பல்வேறு நிர்வாகப் பணிகளில் கடமையாற்றிய மேட்டுக்



குடியினர் போர்த்துக்கேயரின் நிர்வாகத்திலும் முன்னணி வகித்தனர். விதானையார், உடையார் மணியகாரர் ஆகிய முக்கிய பதவிகளில் ஒட்டிக் கொண்டனர். இதற்காகப் பலர் கத்தோலிக்க

மதத்துக்கு மாறினர். அது தொழில், வாழ்க்கை நிமித்தம் மாறிய மதமாற்றமாக இருந்ததே தவிர முழுமனதுடனான மத மாற்றமாக இருக்கவில்லை. இந்தக் கால கட்டத்தில் பெருந் தொகைச் சொத்துக்களைத் தமதாக்கிக் கொள்ளும் வாய்ப்பு இந்த வேளாளருக்குக் கிடைத்தது. போர்த்துக்கேயரும் இங்கிருந்த சமூக ஒழுங்குகளை மாற்றியமைக்க விரும்பவலில்லை.

### சாதிக்கேற்ப தேவாலயங்கள்

கத்தோலிக்க மதத்தில் இணைந்த போதிலும் அந்த மதத்தில் சேர்ந்த உயர்சாதியினர் ஏனைய சாதியினருடன் சமமாக இருந்து வணக்கம் செலுத்துவதை விரும்பவில்லை. சாதி சார்ந்த விடயத்தால் தமது மதத்தில் இணைவதில் பின்னடைவு வந்துவிடக்கூடாது என்பதற்காக அவரவர் விருப்பத்துக்கு வழிபடுவதற்குரிய ஒழுங்குகளைப் போர்த்துக்கேயர் செய்தனர். அதனால் சாதிய ரிதியில் தனித்தனித் தேவாலயங்களை அமைத்தனர். சாதி முரண்பாட்டைத் தீர்த்து மக்களைச் சமப்படுத்துவதற்குப் போர்த்துக்கேயர் முயலவில்லை. சைவக் கோவில்களில் ஏற்கனவே தூப தீபங்களுக்குப் பழக்கப்பட்ட மக்கள் கத்தோலிக்க தேவாலயங்களிலும் வணக்கத்தின்போது அவற்றைத் தொடர விரும்பினர். அதற்கும் போர்த்துக்கேயர் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை.



### விதானைமார்

ஆங்கிலம் கற்றதாலும் ஆங்கிலேயருடன் அந்நியோன்னியமாகப் பழகியதாலும் விதானைமார், உடையார், மணியகாரர் ஆகிய பதவிகளில் மேட்டுக்குடியினர் இலகுவாக அமர்ந்து கொண்டனர். "வைற்கொலர் ஜொப்" என்று இவர்கள் பெருமைப் படுத்தப்பட்டனர். சாதிய ரீதியாகத் தமக்குரிய விவசாயத்தைச் செய்யாத அரச ஊழியர்களாக இவர்கள் இருந்தனர்.

கிராமத் தலைவராகவும், கிராம விடயங்களில் தலையிடும், கட்டளையிடும் அதிகாரியாகவும் மேட்டுக்குடியினரின் பிரிவைச் சேர்ந்தவர்கள் விதானைமாராக இருந்தனர். போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் காலத்தில் அவர்களுக்கு எதிரான கிளர்ச்சிகளைக் கட்டுப்படுத்துவதிலும் இவர்கள் முக்கிய பங்கெடுத்தனர். ஆங்கிலேயர்களுக்கு எதிரான கிளர்ச்சிகளைக் காட்டிக்கொடுப்பதன் மூலம் பதவி உயர்வுகளையும் சன்மானங்களையும் பெற்றுக்கொண்டனர்.

அடிமட்ட மக்களின் பிள்ளைகளுக்குப் பெயர் வைக்கும் அதிகாரம் கூட இந்த விதானைமாருக்கே இருந்தது. அதனால் அவர்கள் வைக்கும் பெயர்கள் தாழ்த்தப்பட்ட மக்களுக்குரிய அடையாளமாக இருந்தன. தாழ்த்தப்பட்டவர்கள் என்று பெயர்களை வைத்து இலகுவில் அடையாளம் காணக்கூடியாவாறு அவை இருந்தன.

**அடிமட்ட மக்களின் பிள்ளைகளுக்குப் பெயர் வைக்கும் அதிகாரம் கூட இந்த விதானைமாருக்கே இருந்தது. அதனால் அவர்கள் வைக்கும் பெயர்கள் தாழ்த்தப்பட்ட மக்களுக்குரிய அடையாளமாக இருந்தன**

இந்த மேட்டுக்குடித் தலைவர் என்கிற நடைமுறை ஒல்லாந்தர், பிரித்தானியர் காலம் எனத் தொடர்ந்து 1948இல் இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னும்கூட நீடித்தது. 1956இல் சுதேச மொழிக் கல்வியை எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்கா அறிமுகப்படுத்தியதால் ஆங்கிலம் கற்ற மேட்டுக்குடி வேளாளர்களுக்கு அதுவும் பாதகமாக அமைந்தது. அதனாலேயே சிங்களம் மட்டும் என்கிற சட்டம் தமிழருக்குப் பாதகமானது என்று இந்த மேட்டுக்குடியினர் போர்க்கொடி தூக்கினர். தமிழ் மொழி மூலக் கல்வி மற்றும் இலவசக் கல்வி ஆகியவற்றால் தாம் இதுவரை காலமும் ஒடுக்கி வந்த சமூகங்களுக்குக் கல்வியறிவு கிடைத்துவிடும் என்று பயந்தனர். ஆனால், இலவசக் கல்வி காரணமாகத் தாழ்த்தப்பட்டவர்கள் என்று மேல்தட்டு வர்க்கத்தினரால் ஒதுக்கப்பட்ட மக்கள் பல பதவிகளில் இணைவதற்கு வாய்ப்பு ஏற்பட்டது. தற்போதைய நிலையில் விதானைமார்கள் சாதிய அடிப்படையில் தெரிவு செய்யப்படுவதில்லை. போட்டிப் பரீட்சை மூலம் செய்யப்படுவதால் மேட்டுக்குடியினர் அல்லாத பலர் அவர்கள் அதிகம் வாழும் பகுதிகளிலேயே கிராம அலுவலர்களாகப் பணியாற்றுகிறார்கள். மேல்தட்டு வர்க்கத்தினரின் சொத்தாக இருந்த விதானைப்பதவியும் அதிகாரமும் பெருமளவுக்கு அவர்களிடமிருந்து தற்போது கைநழுவிப்போய் விட்டது.

(தொடரும்)



# முறுகக் காய்ச்சிய தேன்...?

சித்திரா

தற்போது யாழ்ப்பாணத்திலும் யாழ்ப்பாணத்தை அண்டிய பூநகரி, மன்னார் வீதி, பரந்தன் பூநகரி வீதி, கிளிநொச்சியின் பல இடங்கள் எனப் பரவலாக ஆரம் பிக்கப்பட்டுள்ள ஒரு குடிசைக் கைத்தொழிலாகத் தேன் காய்ச்சுவது மாறியிருக்கிறது. தேனின் நன்மைகள் அதன் மருத்துவ குணங்கள் ஆகிய பலதையும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலும் சமூக வலைத்தளங்களிலும் பார்த்து அறிந்து கொண்ட பல பெண்கள் தமக்கு இருக்கும் நோய்களுக்குத் தேனை வைத்துச் சில மருந்து வகை களை இலகுவாகத் தயாரிக்கின்றனர். இதற்காக நல்ல



தேனை எங்கு வாங்குவது என்று அவர்கள் தேடிக்கொண் டிருக்கும்போது வீட்டு வாசலுக்குக் கொண்டு வந்து தேனை வழங்கும் தொழில் தற்போது பிரபலமாகி வரு கிறது. இயற்கையில் தேனி சேகரித்து வைத்திருக்கும் தேனை எடுத்து விற்பதைத் தவிர்த்துச் செயற்கையாகத் தேனைக் காய்ச்சி விற்பனை செய்து மக்களை ஏமாற் றும் உள்ளூர் வியாபாரிகளாக இவர்கள் இருக்கின்றனர்.

**பெரிய மரமொன்றில் எடுத்த தேன்...!**

அண்மையில் இரண்டு இளைஞர்கள் பெண்கள் ஓடுகின்ற ரகத்திலான மோட்டார் சைக்கிள் ஒன்றில்

**தேனின் நிறையை ஒத்ததாக அதன் நிறை இருந்தது. மணந்து பார்த்தால் தேன் மணம் எழுந்தது. ஆனால் அது இயற்கைத் தேனல்ல என்பதும் தெரிந்தது**

எனது வீட்டுக்கு முன்னால் வந்து நின்று ஒலி எழுப்பி னார்கள். அவர்களின் காலுக்குக் கீழே - மோட்டார் சைக்கிளில் பல தேன் போத்தல்களை அடுக்கி வைத்தி ருந்தனர். " தேன் வேணுமா...?" என்று கேட்டனர். "நாங்கள் ஒரு பெரியமரத்தைத் தறித்தபோது அதற்குள் இருந்து இந்தத் தேனை எடுத்தனாங்கள்... இது சுத்தமான தேன். நீங்க ரெஸ்ற் பண்ணிப் பாருங்கோ... இப்படி ஒரிஜினல் தேன் கிடைக்காது..." என்று கதை விட்டனர். அவர்கள் வைத்திருந்த தேனைப் பார்த்தால் உண்மையான தேன்போன்றே இருந்தது. தேனின் நிறையை ஒத்ததாக அதன் நிறை இருந்தது. மணந்து பார்த்தால் தேன் மணம் எழுந்தது. ஆனால் அது இயற்கைத் தேனல்ல என்பதும் தெரிந்தது. சீனிப்பா ணியை முறுகக் காய்ச்சி தேனின் மணம், தேன் வதை ஆகிய அடையாளங்கள் புகுத்தப்பட்டிருப்பது தெரிந் தது.

**தேன் வதைக்குப் பதில் சோளச் சக்கை**

தேனுக்கு மேலே மிதக்கும் வகைளில் தேன் மெழு குக்குப் (வதை) பதிலாகச் சோளம் சாப்பிட்ட பின்னர் எஞ்சும் வெண்ணிறத் தண்டை வெயிலில் காய வைத்து அதை உரலில் குற்றித் தேன் மெழுகுபோல சிறு துண்டு களாகவும் தூளாகவும் ஆக்கி அதைப் போத்தலின் கழுத்துப் பகுதியில் போட்டிருக்கிறார்கள். அதன் மேல் இயற்கைத் தேனைச் சிறிதளவு விட்டுள்ளனர். முகர்ந்;து பார்க்கும்போது அதனால்தான் நிஜத் தேனின் வாசம் எழுகிறது. மணத்தில் தேனைப்போலவும் தோற்த்தில்




கண்டுபிடிக்க முடியாத வாறும் இருக்கும் இந்த முறுகக் காய்ச்சிய சீனிப் பாணியைக் கண்டுபிடிப்பது சற்றுச் சிரமம் தான்.

இந்த ஏமாற்றுத் தேன் வியாபாரக்காரர்களால் பெரும்பாலும் பெண்களே ஏமாற்றப்படுகின்றனர். நீரிழிவு நோயால் பாலர் பாதிக் கப்பட்டிருக்கிற நிலையில் செயற் கையாகக் காய்ச்சிய சீனிப்பாணித் தேனைப் பாவித்து குருதியில் சீனியின் அளவை அதிகரித்த சம்பவங்களும் உண்டு.

இவ்வாறு காய்ச்சிய சீனிப் பாணித் தேனை மாங்குளம், முறிகண்டி, ஒலுமடு, பூநகரி வீதி எனக் காட்டை அண்மித்த பகுதிகளில் நின்று கூவிக் கூவி விற்கிற ஏமாற்றும் காணப்படுகிறது. அவ்வாறு விற்பவர்களின் கதையைக் கேட்டால் சற்று நேரத்துக்கு முன்னர்தான் காட்டுக்குள்ளிருந்து எடுத்துக் கொண்டு வந்ததுபோலவும் சில தேன் வதைகளை ஒரு பாத்திரத்தில் வைத்து அதிலிருந்து எடுத்ததுபோலவும் கதை விடுவர். இந்தத் தெருவோர வியாபாரத்தில் வாகனங்களில் பயணிக்கும் பலர் ஏமாற்றப்படுகின்றனர்.

தேன் முக்கியமானது என்பதை உணர்ந்த மக்களிடமே இந்தத் தேன் காய்ச்சும் குடிசைக் கைத்தொழிலை மேற்கொள்பவர்கள் பல ஆயிரம் ரூபாய்களைக் கறக்கின்றனர். இவ்வாறு போலித் தேன் விற்க வருபவர்களிடம் அவர்கள் கூறும் விலையில் அரைவாசியாகக் குறைத்துக் கேட்டால், "சீனி விக்கிற விலைக்கு இவர் கேட்கிற விலைக்கு எப்படித் தாறது..." என்று தமக்குள் முணு முணுப்பதைக் காண முடியும். தமிழர்களின் ஏமாற்று வேலை வீட்டு வாசலில் வந்து நிற்பதே இந்தப் போலித் தேன் வியாபாரம் என்பதை மக்கள் தெரிந்து வைத்திருக்க வேண்டும்.

முதல் அத்தியாயம்




01

# மகாவம்சம் கூறுவது என்ன...?

மகாவம்சம் இலங்கையின் தலைவிதியைத் தீர்மானிக்கும் ஒரு வரலாற்று நூலாகக் கொள்ளப்படுகிறது. கி.பி 6ஆம் நூற்றாண்டில் மகாநாமர் என்கிற பிக்குவால் பாளிமொழியில் எழுதப்பட்டது. இது கி.மு 5ஆம் நூற்றாண்டு தொடக்கம் கி.பி 5ஆம் நூற்றாண்டு வரையான பத்து நூற்றாண்டுகால வரலாறு பற்றிக் குறிப்பிடுகிறது. ஐ.நாவின் யுனெஸ்கோ இவ்வாண்டு வெளியிட்ட அறிக்கையில் பழமையான ஆவணமாக இந்த நூலை ஏற்றிருக்கிறது. அந்த மகாவம்சம் என்ற நூலில் என்னவெல்லாம் கூறப்பட்டிருக்கிறது என்பதைச் செம்மண் வாசகர்களுக்கு இந்தப் பகுதியில் வாசிக்கத் தருகிறோம்.

**புத்தர் வருகை**

புனித சம்புத்தரின் பொற்பாதங்களை வணங்கி எவ்விதத்திலும் குறையில்லாததும் எல்லாம் நிறைந்ததுமான மகாவம்சத்தைக் கூறத் தொடங்குகிறேன்.

புராதன முனிவர்களால் தொகுக்கப்பெற்ற அது (மகாவம்சம்) இங்கே விரிவாகக் கூறப்பட்டுள்ளது. பழைய நூல் சுருக்கமானது, பல இடங்களில் ஒரே விடயம் திரும்பத் திரும்பச் சொல்லப்பட்டுள்ளது.

இப்போது சொல்வது அத்தகைய குறைகள் இல்லாதது. புரிந்துகொள்ளவும் நினைவில் வைத்துக்கொள்ளவும் எளிதானது. உற்சாகத்தையும் உள மகிழ்வையும் அளிப்பது. வழிவழியாக வந்த வரலாறு.

உற்சாகத்தையும் உள்ள மகிழ்வையும் அளிக்கும் பகுதிகளைக் கவனமாகக் கேளுங்கள்.

பழங்காலத்தில் சம்புத்த தீபங்கரரைப் பார்த்து நமது வீரர் உலகத்தைத் தீமையின் பிடிப்பில் இருந்து விடுவிப்பதற்காகப் புத்தராகப் பிறக்க முடிவு செய்தார்.

சம்புத்தரை வணங்கிய பிறகு, அதேபோல் கொண்டஞ்ஞர், மங்களர், சுமணர், புத்தரேவதர், இவர்களைப்போன்ற மகா முனிவராகிய சோபிதர், சம்புத்த அனோமதர்சி, பதுமர், நாரதர், சம்புத்தபதுமுத்தரர், ததாகத சுமேதர், ஸூஜாதர், பிரியதரிசி, ஆசான் அத்ததரிசி, தர்ம தரிசி, சித்தார்த்தர், திஸ்ஸர், புஸ்ஸர், விபாசி, சம்புத்தஸிகி, ஆற்றல் வாய்ந்த சம்புத்த வேஸபர், சம்புத்த ககுசந்தர், இவர்களைப்போன்ற கோணாகமனர், அருள் ஞானி காசியபர் – ஆகிய இந்த இருபத்துநான்கு சம்புத்தர்களுக்கும் வணக்கம் செய்துவிட்டு, அவர்களின் அருள்பெற்று தாம் எதிர்காலத்தில் புத்த பதவியை அடையப்போவது பற்றி அவர்களிடமிருந்து தீர்க்க

தரிசனம் அருளப்பெற்று எல்லாக் கடமைகளையும் நிறைவேற்றி உன்னதமான போதி ஞானத்தை அடைந்த கோதம புத்தர் உலகைத் துயரத்திலிருந்து விடுவித்தார்.
மகத நாட்டிலுள்ள உருவேலாவில் (புத்த கயா. வங்காளத்தில் உள்ளது) மகாமுனிவர் போதிமரத்தின் கீழ் அமர்ந்து வைசாக பௌர்ணமியன்று மிகவுயர்ந்த ஞானோதயம் பெற்றார்.
தாம் உயர்ந்த புத்த ஞானம் அடைந்ததை அறிந்து அதை மற்றவரும் உணரும்படி தியானத்தில் அமர்ந்து ஏழு வார காலம் அவர் அங்கு தங்கியிருந்தார்.
பிறகு வாரணாசிக்குச் (காசி) சென்று தர்மசக்கரத்தை உருட்டினார் (உபதேசம் செய்தார்). மாரிகாலத்தில் அங்கு தங்கியிருந்தபோது அவர் அறுபதுபேரை அரகந்தர்களாகச் (போதனை செய்யத் தகுதி வாய்ந்தவர்கள்) செய்தார்.
உலகத்தில் தர்மத்தைப் போதிப்பதற்காக இந்தப் பிக்குகளை அனுப்பிய பிறகு பத்தன் என்பவருடைய முப்பது தோழர்களையும் தமது மார்க்கத்தில் மாற்றி மாரிகாலம் முழுதும் உருவெல வனத்தில் காசியபரைத் தலைவராகக் கொண்டிருந்த ஆயிரம் ஜடிலர்களைத் (ஜடா முடி தரித்த சந்நியாசிகள்) தமது மார்க்கத்துக்கு மாற்றுவதற்காக வசித்தார்.
உருவெல வனத்தில் காசியபர் செய்த பெரிய யாகம் முடிவடையும் தறுவாயில் இருந்தது. அவர், இவரைத் தம்மிடம் வரக்கூடாதெனத் தீர்மானித்தார்.
பின்னர் எதிரிகளை எளிதில் வெற்றி கொள்ளும் ஏந்தல் உத்தரகுருவில் (இந்தியாவுக்கு வடக்கே புராண புருஷரர்கள் வாழும் இடம்) உணவு எடுக்கச் சென்று அவ்வுணவை அனோதத்த ஏரிக்கரையில் (இமய மலையிடையே அமைந்துள்ள 7பெரிய ஆறுகளில் ஒன்று) மாலை நேரத்தில் அருந்திய பிறகு, போதி ஞானமடைந்த ஒன்பதாவது மாதத்தில் பூந பௌர்ணமியன்று இலங்கையில் தமது தர்மத்தைப் போதிப்பதற்காகத் தாமே அங்கு புறப்பட்டார்.
தமது மார்க்கம் பிற்காலத்தில் புகழுடன் திகழப்போகும் இடம் இலங்கை என்பது அவருக்கு அப்போதே தெரிந்திருந்தது. அப்போது இலங்கையில் யக்ஷர்கள் நிரம்பியிருந்தனர். அவர்களை முதலில் அங்கிருந்து விரட்ட வேண்டும் என்பதும் அவருக்குத் தெரியும்.
இலங்கையின் மத்தியில் அழகிய நதிக்கரையில் மூன்று யோசனை நீளமும் ஒரு யோசனை அகலமும் உள்ள மனதுக்கு ரம்மியமூட்டும் மகா நாகவனத்தில் யக்ஷர்கள் வழக்கமாகக்கூடும் இடமுள்ளது என்பதும் அவருக்குத் தெரியும்.
அப்போது தீவிலிருந்த எல்லா யக்ஷர்களும் அங்கு கூடியிருந்தனர்.
இந்த யக்சர்களின் பேரவைக் கூட்டத்துக்கு பகவான் புத்தர் சென்றார். அங்கு கூட்டத்தின் நடுவில் அவர்களுடைய தலைக்கு மேலாக, பிற்காலத்தில் மகியங்கான ஸ்தூபம் அமைந்த இடத்தில் அவர் வானத்திலே நின்றார்.
வான வெளியிலிருந்து மழையையும் புயலையும் இருளையும் உண்டாக்கி அவர்கள் மனதில் அச்சத்தை உண்டாக்கினார். பயத்தால் ஆட்கொள்ளப்பட்ட யக்சர்கள் தங்களுடைய பயத்தைப் போக்குமாறு அச்சமற்ற இவரை வேண்டினர்.
மிரண்டுபோன யக்சர்களைப் பார்த்துப் பகவன் புத்தர், ''யக்சர்களே! உங்களுடைய இந்தப் பயத்தையும் துயரத்தையும் போக்குகிறேன். இங்கே நான் உட்காருவதற்கு ஓர் இடம் கொடுங்கள்'என்று கூறினார். யக்சர்கள், ''இறைவனே எங்கள் தீவு முழுதையும் வேண்டுமானாலும் தருகிறோம். எங்களுக்குப் பயத்திலிருந்து விடுதலை அளியுங்கள்'என்று கூறினார்கள்.



அவர் யக்சர்களுடைய பயத்தையும் குளிரையும் இருட்டையும் போக்கிய பிறகு அவர்கள் அவர் உட்காருவதற்கு அளித்த தோலைப் பரப்பி அதில் அமர்ந்துகொண்டு அத்தோல் ஆசனத்தை எரிதழல் சூழ்ந்துகொண்டே பரவலாக வளரும்படி செய்தார். எரிதழலைக் கண்டு பயந்துபோன அவர்கள் அப்புறமாகச் சூழ்ந்து நின்று கொண்டார்கள்.
பின்னர் பகவன் புத்தர் ரம்மியமான கிரித் வீபத்தை (இது நாகர் மலைத்தீவு எனும் நிக்கோபார் தீவைக் குறிக்கிறது என்பது சிலர் கருத்து) அருகில் வரச் செய்தார். யக்சர்கள் அனைவரும் அதில்போய்த் தங்கியதும் அதை மீண்டும் பழைய இடத்துக்குத் திரும்பிப் போகச் செய்தார்.
பிறகு பகவன் தமது தோல் ஆசனத்தை மடித்து வைத்தார். தேவர்கள் வந்து கூடினர்.
தேவர்கள் கூட்டத்தில் பகவன் தமது தர்மத்தைப் போதித்தார். கோடிக்கணக்கான ஜீவர்கள் மதம் மாறினர். கணக்கற்றவர்கள் திரிசரணமடைந்து சீலத்தைப் பெற்றனர்.

(மிகுதி அடுத்த வாரம்)






# பாபா பிளாக் ஷீப்

## போதனை செய்யும் சினிமா

**கதை**

ஆண்கள், பெண்கள் கலந்து கல்வி கற்கின்ற தனியார் பாடசாலையில் படிக்கும் அயாஸூம் (அப்துல் அயாஸ்) என்.பியும் (நரேந்திர பிரசாத்) ஆளுக்கு 4 சக மாணவர்களைச் சேர்த்து கொண்டு எதிரும் புதிருமாக அடிக்கடி முரண்பட்டுக்கொள்கிறார்கள். இவர்களின் பொதுவான தோழியாக வலம் வருகிறாள் மாணவி நிலா (அம்மு அபிராமி). ஒருநாள், உயிர்மாய்ப்பது குறித்து எழுதிய ஒரு மாணவரின் கடிதம் இவர்கள் கையில் கிடைக்கிறது. அதை எழுதிய மாணவர் தனது பெயரைக் குறிப்பிடாமல், தான் உயிர்மாய்த்துக்கொள்ளப்போகும் திகதியை மட்டும் குறிப்பிட்டுள்ளார். பதற்றமாகும் மூவரும் அதை எப்படியாவது தடுத்து நிறுத்திவிட வேண்டும் என்பதற்காக அவர் யார் எனத் தேடத் தொடங்குகிறார்கள். அதை அவர்களால் கண்டுபிடிக்க முடிந்ததா? அந்த உயிர்மாய்ப்பைத் தூண்டிய பின்னணி என்ன என்பது மீதிக் கதை.

**பலம் - பலவீனம்**

முதல் பாதிப் படம் முழுவதும் பாடசாலை மாணவர்களின் சேட்டைகளைச் சித்தரிப்பதிலேயே ஆர்வம் காட்டியிருக்கிறார் அறிமுக இயக்குநர் ராஜ்மோகன். அவற்றில் பல காட்சிகள் கூறியது கூறலாக இருந்தாலும் கைபேசிக் காலத்து மாணவர்களின் நக்கல், நையாண்டி, எள்ளல் அடங்கிய உரையாடல் வழியாக ரசிக்கும்படித் தந்திருக்கிறார். ஆர்.ஜே.விக்னேஷை வைத்து எழுதப்பட்டிருக்கும் பள்ளி வளாக நகைச்சுவைகள் எடுபட்டுள்ளன. ஜி.பி.முத்து பள்ளிக்குச் சிறப்பு விருந்தினராக வரும் அந்த ஒரு காட்சி பலே.

இரண்டாம் பாதியில் அபிராமி வரும் காட்சிகளும் அவர், இந்த மூன்று மாணவர்களையும் பார்த்துக் கேட்கும் கேள்வியும் இன்றைய மாணவர்களின் மனசாட்சியை உலுக்கும். சில காட்சிகள் உரையாடலை நம்பி நகர்வது, தொலைக்காட்சித் தொடர் பார்ப்பதைப் போன்ற உணர்வைத் தருகிறது.

**பாத்திரங்கள்**

மாணவர்களாகச் சீருடை அணிந்து நடித்திருக்கும் நடிகர்கள் அனைவரும் கல்லூரி மாணவர்களுக்குரிய முதிர்ச்சியான தோற்றத்தில்

இருப்பது உறுத்தல்.

அறிமுக நடிகர்கள், அம்மு அபிராமி, 'விருமாண்டி' அபிராமி, போஸ் வெங்கட் ஆகியோரிடம் கதாபாத்திரங்க ளுக்கான நடிப்பை வாங்குவதில் வெற்றிபெற்றிருக்கும் இயக்குநர், திறமையான நடிகரான வினோதினி வைத்தி யநாதனை வீணடித்திருக்கிறார். அதேபோல் முதன்மைக் கதாபாத்திரங்களைத் தட்டையாகச் சித்தரித்திருப்பதும் பலவீனம்.

பல்வேறு காரணங்களுக்காக மாணவ, மாணவிகள் உயிர்மாய்த்துக்கொள்வது பெரிய பிரச்சினையாக இருந்துவரும் நிலையில், அதைச் சரிசெய்ய வேண்டிய பொறுப்பு யாருக்கெல்லாம் இருக்கிறது, அந்தப் பிரச்சி னையை எப்படி அணுகுவது என்பதை போதனையாகச் சொல்கிறது படம்.




இவ்விதழ் யாழ்ப்பாணம் இல. 551ஏ கஸ்தூரியார் வீதியிலுள்ள கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிமிட்டட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 22.07.2023 அன்று வெளியிடப்பட்டது. தொடர்பு :0214927781